TNPSC Tamil Current Affairs 26th April 2017

1). பின்வரும் நாடுகளில் எந்த நாடு Hana Khatib அவர்களை முஸ்லிம் ஷரியா நீதிமன்ற அமைப்பின் முதல் பெண் நீதிபதியாக நியமித்துள்ளது?

A).ஈரான்.

B).இஸ்ரேல்.

C).பாலஸ்தீனம்

D).ஈராக்.

விடை : B). இஸ்ரேல்.

இஸ்ரேல் நாடு, Hana Khatib அவகளை இஸ்ரேல் முஸ்லிம் ஷரியா நீதிமன்ற அமைப்பின் முதல் பெண் நீதிபதியாக நியமித்துள்ளது. Hana Khatib அவர்கள் வட டம்ரா நகரத்தின் வழக்கறிஞராகப் பணியாற்றினார். இவர் இஸ்ரேல் நீதித்துறைக் கமிட்டியினால் தேர்வு செய்யப்பட்டு மதசார்புடைய இஸ்ரேல் நீதிமன்றமான முஸ்லிம் ஷரியா நீதிமன்றத்தில் நீதிபதி பதவியில் அமர்த்தப்படவுள்ளார். இதன் மூலம் மதசார்புடைய இஸ்ரேல் நீதிமன்றங்களில் பணியமர்த்தப்படவுள்ள முதல் பெண் நீதிபதி என்னும் பெருமையைப் பெறுகிறார். இதன் காரனமாக இவரது பணியமர்வு மிகச் சிறப்பாகக் கருதப்படுகிறது. Hana Khatib அவர்களுக்கு இஸ்ரேல் குடியரசுத் தலைவரான Reuven Rivlin அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைப்பார்.

2). 2017 ஆம் ஆண்டு உலக மாஸ்டர் போட்டியில்(World Masters Game) தங்கம் வென்ற Man Kaur எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?

A).Sprint.

B).Shot put.

C).Wushu.

D).Table Tennis.

விடை : A). Sprint.

101 வயது மூதாட்டியான Man Kaur அவர்கள் ஏப்ரல் 24, 2017 அன்று நியூசிலாந்தில் உள்ள ஆக்லாண்டில் நடைபெற்ற 100 மீட்டர் ஸ்பிரிண்ட்(Sprint) போட்டியில் தங்கம் வென்றார். அவர் 100 மீட்டர் தூரத்தை 1 நிமிடம் 14 விநாடிகளில் ஓடி முடித்தார். இவர் வயதினர் யாரும் இப்போட்டியில் கலந்து கொள்ளவில்லை. இவர் தனது 93 ஆவது வயதில் தொடங்கிய தனது விளையாட்டுப் பயணத்தில் 16 தங்கப் பதக்கங்கள் வென்றுள்ளார் மற்றும் இப்போட்டியில் அவர் பெற்றது தனது 17 ஆவது தங்கப் பதக்கமாகும்.

3). 2017 ஆம் ஆண்டின் ஆரிவுசார் சொத்து தினத்தின் (World Intellectual Property Day) கருப்பொருள் என்ன?

A).Digital Creativity: Culture Reimagined.

B). Creativity- The Next Generation.

C).Innovation -Improving Lives.

D).Green Innovation.

விடை : C). Innovation -Improving Lives.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 26 ஆம் தேதி ஆரிவுசார் சொத்து தினமாகக் (World Intellectual Property Day) கொண்டாடப்பட்டு வருகிறது. காப்புரிமை, தொழிற்ச்சாலை அமைப்பு, வர்த்தகச் சின்னம் போன்றவை கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்துகின்றன. சுகாதாரத்துடனும் பாதுகாப்புடனும் வாழ்வத்றக்கு கண்டுபிடிப்புகள் எவ்வாறு உதவுகிறது என்பதினை வெளிக்காட்டுவதற்க்காக இத்தினத்தின் 2017 ஆம் ஆண்டிற்க்கான கருப்பொருள் " Innovation -Improving Lives" எனப்படுவதாகும்.

4). இந்தியாவின் எந்த மாநிலத்தில் முதன் முறையாக முகநூல்(Facebook) மற்றும் Twitter வாசிகளுடன் உறையாடுவதர்க்கான கூட்டத்தினை அம்மாநில முதல் அமைச்சர் கூட்டவுள்ளார்?

A).உத்திரப் பிரதேசம்.

B).கர்நாடகா.

C).கேரளம்.

D).ஹரியா.

விடை : D). ஹரியானா.

ஹரியானா மாநிலத்தில் முதன் முறையாக முகநூல்(Facebook) மற்றும் Twitter வாசிகளுடன் உறையாடுவதர்க்கான கூட்டத்தினை அம்மாநில முதல் அமைச்சரான மனோகர் லால் கூட்டவுள்ளார். சமூக வளைதள வன்கொடுமைகளை சீராக்கும் வழிமுறைகளைப் பற்றி விவரிக்கக் பஞ்சகுலா எனும் இடத்தில் கூட்டியிருந்த கூட்டத்தில் ஹரியானா முதல் அமைச்சர் அவர்களின் அரசாங்க செயலாளரான திரு.ராகேஷ் குப்தா அவர்கள் முகநூல்(Facebook) மற்றும் Twitter வாசிகளுடன் உறையாடுவதர்க்கான திட்டத்தை அறிவித்தார். மே 15,2017 அன்று ஹரியானா மாநில அரசாங்கம் பல்வேறு துறைகளில், முகநூல்(Facebook) மற்றும் Twitter தளங்களினால் ஏற்ப்படும் வன்கொடுமைகளை கண்காணிக்க புதிய கண்காணிப்புத் தளங்களை நிறுவியுள்ளது. இதன் மூலம் அரசாங்கத்திற்க்கு சமூக வளைதளங்கள் சம்பந்தமாக வரும் புகார்களை எளிதில் சீர்செய்யமுடியும்.

5). Amateur Kabaddi Federation of India(AKFI) வின் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தலைவர் யார்?

A). Mridul Bhadauria.

B).K E Prabhakar.

C).Dinesh Patel.

D).V.Veeralankaiah.

விடை : A). Mridul Bhadauria.

Mridul Bhadauria அவர்கள் Amateur Kabaddi Federation of India(AKFI) வின் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் மற்றும் Dinesh Patel அவர்கள் Amateur Kabaddi Federation of India(AKFI) வின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்நியமனத்திற்க்கான தேர்தல் நீதிபதி திரு. ஐ.ஸ். இஸ்ரானி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. Amateur Kabaddi Federation of India(AKFI) என்பது கபடி விளையாட்டிற்க்கென அமைக்கப் பட்ட மத்திய அமைப்பாகும். இது இந்தியா மற்றும் அண்டை நாடுகளில் கபடியின் தரத்தை

மேம்படுத்துவதற்க்காக பாடுபடுகிறது மற்றும் Amateur Kabaddi Federation of India(AKFI) அமைப்பு இந்தியாவில் பெண்கள் மற்றும் ஆண்களுக்கான சர்வதேச கபடி போட்டிகளை ஏற்ப்பாடு செய்யும்.

6). "Dara Shikoh"-இந்தியாவின் ஆன்மீக மரபுகளை மீட்பதற்க்கான சர்வதேச கருத்தரங்கு எந்த மாநகரத்தில் நடைபெறவுள்ளது?

A).போபால்.

B).புது டில்லி.

C).ஹய்தராபாத்.

D).லக்னோ.

விடை : B). புது டில்லி.

"Dara Shikoh"-இந்தியாவின் ஆன்மீக மரபுகளை மீட்பதற்க்கான சர்வதேச கருத்தரங்கு ஏப்ரல் 27 2017 அன்று புது டில்லியில் உள்ள ICCR(Indian Council of Cultural Relations) யினுடைய அசாத் பவனில் நடைபெறவுள்ளது. ICCR(Indian Council of Cultural Relations) யினால் நடத்தப்படும் இக்கருத்தரங்கு இரண்டு நாட்கள் நடைபெறும் மற்றும் இக்கருத்தரங்கில் அமேரிக்கா, ஈரான், ஆப்கானிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கசகஸ்தான் ,இந்தியா போன்ற நாடுகள் பங்கேற்க்கும். தாரா சிக்கோக் அவர்களின் இந்து முஸ்லிம்களுக்கிடையே ஆன்மீக ஒற்றுமையை ஏற்ப்படுத்துவதர்க்கான பங்களிப்பிற்க்காகவே இக்க்ருத்தரங்கு ஏற்ப்பாடு செய்யப்பட்டது.

7). கீழே கொடுக்கப் பட்டவர்களுல் எந்த நபருக்கு காந்தசாலா தேசிய விருது வழங்கப்பட்டது?

A).Asha Bhosle.

B).Ramalingeswara Rao.

C).Vani Jairam.

D).Ananda Bhaskar.

விடை : C). Vani Jairam.

மிகச் சிறந்த பின்னிப் பாடகியான வானி ஜெய்ராம் அவர்களுக்கு ஏப்ரல் 23, 2017 அன்று காந்தசாலா தேசிய விருது வழங்கப்பட்டது. அவர் கிருஷ்ண பரமாத்மாவைப் போற்றிப் பாடிய மிகச் சிறந்த பாடல்களுக்காக வட மாநிலங்களில் மீராபாய் என்றழைக்கப்ப்ட்டார். இவ்விருது பிரபால பாடகரான காந்தசாலா வெங்கடேஷ்வர ராவ் அவர்களின் நினைவாக காந்தசாலா தேசிய கலைக் கூடத்தினால் வழங்கப்பட்டது.

8). உலக ஆய்வுக்கூட விலங்கு தினம்(World Lab Animal Day) எந்த நாளன்று கொண்டாடப்படுகிறது?

A).ஏப்ரல் 24.

B).ஏப்ரல் 25.

C).ஏப்ரல் 26.

D).ஏப்ரல் 27.

விடை : A). ஏப்ரல் 24.

ஆய்வுக்கூடங்களில் இருக்கும் விலங்குகளுக்கான உலக தினமாக உலக ஆய்வுக்கூட விலங்கு தினம்(World Lab Animal Day) ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 24 அன்று கொண்டாடப்படுகிறது. National Anti- Vivisection Society(NAVS) யின் தலைவரான Hugh Dowding அவர்களில் பிறந்த தினம் இத்தினமாகக் கொண்டாடப்படுகிறது. National Anti- Vivisection Society(NAVS) மற்றும் வேறு பல அமைப்புகளால் ஆய்வுக்கூடங்களில் விலங்குகளைப் பயண்படுத்தி ஆராய்ச்சி செய்வதை எதிர்த்து இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. இருப்பினும் இத்தினம் ஐ.நா வால் அனுசரிக்கப்ப்ட்டும் பட்டியளில் இடம்பெறவில்லை.

9).CREDAI நிறுவனம் சமீபத்தில் பாரத ஸ்டேட் வங்கியுடன் வீட்டுத் திட்டங்களுக்கான கடன் சலுகைகளுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கையெழுத்திட்டுள்ளது. CREDAI நிறுவனத்தின் தலைமையிடம் எங்குள்ளது?

A).கொச்சி.

B).பூனே.

C).புது டில்லி.

D).சென்னை.

விடை : C). புது டில்லி.

CREDAI(The Confederation of Real Estate Developers Association of India) நிறுவனம் SBI(State Bank of India) வுடன் இணைந்து வீடு கட்டுவோர் மற்றும் வீடுகளை வாங்குபவர்களுக்கான கடன் சலுகைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கையெழுத்திட்டுள்ளது. இவ்விரு நிறுவனங்களும் இணைந்து குறைந்தவிலையில் வீடுகள் மற்றும் பசுமை வீடுகளை உறுவாக்கி ரியல் எஸ்டேட் துறையினை மேம்படுத்த முயற்ச்சிக்கிறது. இவ்வொப்பந்தத்தின் ஆயுட் காலம் 3 வருடங்களாகும். CREDAI(The Confederation of Real Estate Developers Association of India) நிறுவனமானது ஒரு வீட்டு மனைகளுக்கான கம்பனி சட்டத்தின் பகுதி 25 யின் கீழ் இயங்கும் ஒரு தனியார் நிறுவனமாகும். மேலும் இந்நிறுவனம் இலாப நோக்கற்ற நிறுவனமாகும் மற்றும் இதன் தலைமையிடம் புது டில்லியில் உள்ளது.

10). 15 ஆவது முறை நடைபெறவுள்ள இந்தியா-பிரான்சு வருனா கடர்படைப் பயிற்ச்சி எந்த துறைமுகத்தில் நடைபெற்றது?

A).Port of Quilon.

B).Visakhapatnam Port.

C).Kochi Port.

D).Toulon Port.

விடை : D). Toulon Port.

15 ஆவது முறை நடைபெற்ற இந்தியா-பிரெஞ்சு வருனா கடர்படைப் பயிற்ச்சி தென் பிரான்சில் உள்ள Toulon துறைமுகத்தில் ஏப்ரல் 24, 2017 அன்று இரு நாடுகளுக்குமிடையே போர் ஒற்றுமையை மேம்படுத்துவதர்க்காக இந்நிகழ்ச்சி நடைபெற்றது. மற்ற நாடுகளுக்கிடையே கப்பல் துறையில் ஒற்றுமையான உணர்வைக் கொண்டிருக்கும் இந்தியாவின் அமைதியை முன்னிருத்தி

இந்தியாவிற்க்கும் பிரான்சு நாட்டிற்க்கும் இடையே இருக்கும் உறவை சிறப்பிபதற்க்கும் இந்தியா-பிரான்சு வருனா கடர்படைப் பயிற்ச்சி நடைபெற்றது. ஏப்ரல் 30 ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியாவிற்க்காக Guided Missile Destroyer INS Mumbai, Stealth frigate INS Trishul, Fleet Tanker INS Adithya போன்ற காப்பல்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றன. இக்கப்பல்கள் அனைத்தும் தென் பிரான்சில் உள்ள Toulon துறைமுகத்திற்க்கு வந்தடைந்தன.

---

winmeen